அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 11/2020

எனது இல: F/FR/03/BRCir
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திரச் சதுக்கம்
கொழும்பு 07.

2020.06.10

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்

**அரசாங்க கட்டிடங்கள் மற்றும் வீடுகளிலிருந்தான வாடகை வருமானம், 20.02.01.01 என்னும் வருமானக் குறியீட்டிற்கான 2021 ஆம் ஆண்டிற்கான வருமான மதிப்பீடு**

அரச வருமானங்களை மதிப்பீடு செய்தல், சேகரித்தல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் பற்றிய வழிகாட்டல்களை உள்ளடக்கிய, 2015.07.20 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசிறைக் கொள்கைச் சுற்றறிக்கையின் பால் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அரசிறைக் கணக்கீட்டு அலுவலராக செயற்படும் 20.02.01.01 - அரசாங்க கட்டிடங்கள் மற்றும் வீடுகளிலிருந்தான வாடகை வருமானம் வருமானக் குறியீட்டின் கீழ் வருமானத்தினைச் சேகரிப்பதற்கு பொறுப்பு அளிக்கப்பட்டுள்ள பிரதம கணக்கீட்டு அலுவலர்கள்/ கணக்கீட்டு அலுவலர்களினால் சேகரிக்கப்பட எதிர்பார்க்கப்படும் வருமானங்கள், தொடர்பான மதிப்பீடுகளானவை நி.பி. 85 (1), (2) கட்டடங்களின் விபரங்களின் அடிப்படையில் சாத்தியப்படக்கூடிய அளவிற்கு உண்மையாகவும் துல்லியமாகவும் தயாரிக்கப்பட்டு "buildingrentpubad@gmail.com" என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு மென் பிரதியுடன் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு பிரதம நிதி அலுவலரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

03. ஆதலினால், 20.02.01.01 என்னும் வருமானக் குறியீட்டின் கீழ் 2021 ஆம் ஆண்டிற்காக தங்களின் அலுவலகத்தினால் சேகரிக்கப்பட எதிர்பார்க்கப்படும் வருமானங்கள், அரசாங்க கட்டிடங்கள் மற்றும் வீடுகளிலிருந்தான வாடகை வருமானம் தொடர்பிலான மதிப்பீடுகளை இணைக்கப்பட்ட மாதிரிக்கமைய தயாரிக்குமாறும் 2020.06.26 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இவ் அமைச்சிற்கு அதனைச் சமர்ப்பிக்குமாறும் தாங்கள் தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

பிரதிகள் :- 1. கணக்காய்வாளர் நாயகம்
2. பணிப்பாளர் நாயகம் - அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(மாதிரிப் படிவ இலக்கம். 1)

# 2021 ஆம் ஆண்டிற்கான வருமான மதிப்பீடுகள்

(i) நியதிச்சட்டம் / அதிகாரம்:- தாபன விதிக்கோவை / காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் / அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை: 11/2020

(ii) சட்டம் / அதிகாரம்:- பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

(iii) வருமான வகை:- அரசாங்க கட்டிடங்கள் மற்றும் வீடுகளிலிருந்தான வாடகை வருமானம்

(iv) வருமானப் குறியீட்டு இலக்கம்:- 20.02.01.01

| விபரம் | வருமானம் 2019 ரூபா. மில்லியன் | மதிப்பிடப்பட்ட வருமானம் 2020 | | | 2021 ஆம் ஆண்டற்காக மதிப்பீட்டு வருமானம் ரூபா. மில்லியன் | எதிர்பார்க்கும் வருமானம் | | நிரல் 3 ற்கும்; 4 ற்கும் இடையிலான மாற்றத்திற் கான காரணம் | நிரல் 4 ற்கும் 6 ற்கும் இடையிலான அதிகரிப்பு அல்லது குறைவிற்கான விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அடிப்படை மதிப்பீடு ரூபா. மில்லியன் | திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா. மில்லியன் | 2020.05.31 அன்று வரையான உண்மை வருமானம் ரூபா. மில்லியன் | | 2022 ரூபா. மில்லியன் | 2023 ரூபா. மில்லியன் | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1. அலுவலக விடுதிகள்<br>2. சுற்றுலா விடுதி/ விடுமுறை விடுதி<br>3. வர்த்தக நோக்க கட்டிடங்கள் / களஞ்சிய சாலைகள்<br>4. ஏனைய கட்டட வாடகை | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | |

(தகுந்த காரணங்களுடன் நிரல் இல. 7 மற்றும் 8 ஆகியவற்றைப் பூர்த்திசெய்வது கட்டாயமானதாகும்.)

சரியானதென உறுதிப்படுத்துகிறேன்

திகதி :-

.................................................................

செயலாளர் / திணைக்களத் தலைவர் / மாவட்டச் செயலாளர்;

(அலுவலக முத்திரை)